# சிவகங்கை மாவட்டம்

# சிவகங்கை நகராட்சி

# 2021–2022ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 1. | நகராட்சியின் பெயர் | – | சிவகங்கை |
| 2. | நிலை | – | முதல் நிலை |
| 3. | விஸ்தீரணம் | – | 6.97 சதுர கிலோ மீட்டர் |
| 4. | மக்கள் தொகை | – | 2011 கணக்குப் படி 40403<br>ஆண் – 20299<br>பெண் – 20104 |
| 5. | 2021–2022 உத்தேச மக்கள் தொகை | – | 44443<br>ஆண் – 22329<br>பெண் – 22114 |

**எல்லை:**

சிவகங்கை – மேலூர் சாலையில் 1–வது கிலோ மீட்டர் கல்லில் ஆரம்பமாகி வடக்கு நோக்கி ஓடை மடம் வழியாக சிவகங்கை திருப்பத்தூர் நெடுஞ்சாலையில் 20–வது கிலோமீட்டர் கல்லில் சேர்ந்து, பிறகு சற்று கீழ் திசையில் மயானக்கரையில் வடக்கு மூலையில் உள்ள 243.00 மீட்டர் தொலைவில் உள்ள சர்வே பெரிய கல்லில் சேர்ந்து, பிறகு சற்று தென்திசை நோக்கி 3.98 கி.மீட்டர் தொலைவில் உள்ள பெரிய சர்வே கல்லில் நேரடியாக எல்லைக்கோடு செல்கிறது. பிறகு கீழ்திசை நோக்கி திருவா உடப்பு புதூருக்கு தெற்கே உள்ள 533.400 மீட்டர் தொலைவில் உள்ள பெரிய சர்வே ரயில்வே கல்லை அடைகிறது.

**கிழக்கு:**

மேற்கண்ட இடத்திலிருந்து தெற்காக மதுரை–தொண்டி ரோட்டில் உள்ள கிலோ மீட்டர் கல்லில் 44/6 என்ற இடத்தை (அதாவது 70–ம் எண் மதகுக்கு கிழக்கில்) அடைந்து பிறகு மீண்டும் தெற்கு திசையில் ரயில்வே குறுக்கு ரோடு இளையான்குடி ரோடு சந்திப்பில் நேராகச் செல்கிறது.

**தெற்கு:**

மானாமதுரை – சிவகங்கை ரோட்டில், 211/4, கிலோமீட்டர் கல்லுக்கு மேற்கே, 16.09 மீட்டர் தொலைவில் நடப்பட்ட பெரிய சர்வே கல்லில் சேர்த்து, பிறகு வடமேற்காக நேரடியாக மாப்பிள்ளைத் தேவர் ஊரணியில் தென்மேற்குச் சாலையில் உள்ள கல்லை அடைகிறது.

**மேற்கு:**

சிவகங்கை–மதுரை நெடுஞ்சாலையில் மதகு எண்..75–க்கு மேற்கே விடப்பட்டு இருக்கும் பெரிய சர்வே கல்லை அடைந்த பிறகு கொட்டகுடி கண்மாய் தீட்சகர் மடம் முன்பாக பிள்ளையார் கோவில் பிளாட்பாரத்தை அடைந்து, எல்லைக்கே மீண்டும் சிவகங்கை–மேலூர் நெடுஞ்சாலை ஆரம்ப இடத்தை அடைகிறது.

சிவகங்கை 01.04.1965 முதல் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 27.01.1965 தேதிய 195 நிர் அரசாணையின் படி மூன்றாம் நிலை நகராட்சியாக ஆக்கப்பட்டது. பின் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் அரசாணை எண்.599–ன் படி 17.04.198484ம் தேதி முதல் இரண்டாம்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வந்த நிலையில் மேலும், அரசாணை நிலை எண்.85 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்

வழுங்கல்துறை 22.05.1998—ன்படி முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்வு செய்யப்பட்டுள்ளது.

**நகர் மன்றம்:**

17.10.2011ல் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டு 25.10.2011 முதல் திரு.எம்.அர்ச்சுணன் நகர்மன்ற தலைவராகவும், திரு.வி.சேகர் நகர்மன்ற துணைத் தலைவராகவும் கீழ்கண்ட நபர்கள் நகர்மன்ற உறுப்பினராகவும், நகர்மன்றத்தை நடத்தி வந்தனர்.

| வார்டு | பெயர் | ஒதுக்கீடு விபரம் |
|---|---|---|
| தலைவர் | அர்ச்சுணன்.எம் | பொது |
| 23 நகர்மன்ற துணைத் தலைவர் | சேகர்.வி | பொது |
| 1. | பழனி.வி | பொது |
| 2. | பெருமாள் அம்மாள்.ச. | ஆதிதிராவிடர் (பெண்) 31.01.2012 இறப்பு |
| 3. | தனசேகரன்.அ | பொது |
| 4. | அன்புமணி.எம் | பொது |
| 5. | மோகன் ராஜ்.ஆர் | பொது |
| 6. | முத்துப்பாண்டி.மா | பொது |
| 7. | ஜெயகாந்தன். சு | பொது |
| 8. | அனுசுயாதேவி. எஸ் | பெண் (பொது) |
| 9. | இராமநாதன். எம் | பொது |
| 10. | மோகனசுந்தரம். அ | பொது |
| 11. | விமலா.எம் | பெண்(பொது |
| 12. | சரவணன் சி.எல் | பொது |
| 13. | மணிமாலா. ஜெ | பெண் (பொது) |
| 14. | ஷகீனா பர்வீன். அ | பெண் (பொது) |
| 15. | மீனா.பா | பொது |
| 16. | பாண்டியராணி.ஜி | பெண் (பொது) |
| 17. | காளீஸ்வரி. வி | பெண் (பொது) |
| 18. | சரவணக்குமார். ஆர் | பொது |
| 19. | இராசு. சு | பொது |
| 20. | காஜாமுகைதீன். ம | பொது |
| 21. | பாக்யலெட்சுமி.வி | பெண் (பொது) |
| 22. | சண்முகராஜன். க | பொது |
| 24 | முத்துப்பாண்டி. க | பொது |
| 25. | ராஜபாண்டி. க | பொது |
| 26. | கிருஷ்ணகுமார். கோ | ஆதிதிராவிடர் (பொது) |
| 27. | பரமேஸ்வரி.மா | பெண் (பொது) |

மேலும் நியமனக்குழு, ஒப்பந்தக்குழு, மற்றும் வரி மேல் முறையீட்டுக் குழுவில் கீழ்கண்ட உறுப்பினர்கள் உள்ளனர்.

**நியமனக்குழு:** திரு.தனசேகரன்.அ 3–வது வார்டு உறுப்பினர்.
**ஒப்பந்தக்குழு** :திரு. அன்பு மணி எம். 4–வது வார்டு உறுப்பினர்.
**வரி மேல்முறையீட்டு குழு:**

1. திரு.பழனி.வி 1–வது வார்டு உறுப்பினர்.
2. திரு.முத்துப்பாண்டி.மா 6–வது வார்டு உறுப்பினர்.
3. திரு.மோகனசுந்தரம்.அ 10–வது வார்டு உறுப்பினர்.
4. திரு.காஜாமுகைதீன். ம 20–வது வார்டு உறுப்பினர்.

இடைப்பட்ட ஆண்டில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெறவில்லை. அறிக்கையாண்டில் 01.04.2021 முதல் 03.03.2022 வரை ஆணையாளர் அவர்கள் தனி அலுவலராகவும். மீண்டும் 04.03.2022 முதல் திரு.சிஎம்.துரைஆனந்த் நகர்மன்ற தலைவர், திரு.ம.கார்கண்ணன் நகர்மன்ற துணைத் தலைவர் தலைமையில் கீழ்கண்ட நகர்மன்ற உறுப்பினர்களாகவும் நகர்மன்றத்தை நடத்தி வருகின்றனர்

| வார்டு | பெயர் | ஒதுக்கீடு விபரம் |
|---|---|---|
| 27 தலைவர் | சி.எம்.துரைஆனந்த் | பொது |
| 2 துணைத் தலைவர் | ம.கார்கண்ணன் | பொது |
| 01 | மா.மகேஷ்குமார் | பொது |
| 03 | சோ.வண்ணம்மாள் | ஆதிதிராவிடர் பெண்கள் |
| 04 | வீ.சேது நாச்சியார் | பெண் (பொது) |
| 05 | தி.விஜயகுமார் | பொது |
| 06 | சு.ஜெயகாந்தன் | பொது |
| 07 | மு.காந்தி | பொது |
| 08 | இரா.ஜெயா ஜெனிபர் | பெண் (பொது) |
| 09 | இரா.சண்முகத்தாய் | பெண் (பொது) |
| 10 | செ.அமுதா | பெண் (பொது) |
| 11 | மு.ராஜா | பொது |
| 12 | பி.புஷ்பம் | பெண் (பொது) |
| 13 | சா.தமிழ்செல்வி | பெண் (பொது) |
| 14. | பி.அழகுமுத்து | பெண் (பொது) |
| 15 | மு.அன்புமணி | பொது |
| 16 | அ.சுபைதாள் பேகம் | பெண் (பொது) |
| 17 | மா.இராமநாதன் | பொது |
| 18 | ரா.ராஜேஸ்வரி | பெண் (பொது) |
| 19 | வி.பாக்கிலெட்சுமி | பெண் (பொது) |
| 20 | ச.பிரியங்கா | பெண் (பொது) |
| 21 | அ.அயூப்கான் | பொது |
| 22 | சி.லெ.சரவணன் | பொது |
| 23 | க.ராஜபாண்டியன் | பொது |
| 24 | கா.கீதா | பெண் (பொது) |
| 25 | கி.ராதா | ஆதிதிராவிடர் பெண்கள் |
| 26. | ரா.மதியழகன் | ஆதிதிராவிடர் (பொது) |

மேலும் நியமனக்குழு, ஒப்பந்தக்குழு, மற்றும் வரி மேல் முறையீட்டுக் குழுவில் கீழ்கண்ட உறுப்பினர்கள் உள்ளனர்.

**நியமனக்குழு**: திரு.சு.ஜெயகாந்தன் 6–வது வார்டு உறுப்பினர்.

**ஒப்பந்தக்குழு** : திருமதி.அ.சுபைதாள் பேகம். 16–வது வார்டு உறுப்பினர்.

**வரி மேல்முறையீட்டு குழு:**
1. திருமதி.சோ.வண்ணம்மாள் 3–வது வார்டு உறுப்பினர்.
2. திருமதி.வி.பாக்யலெட்சுமி 19–வது வார்டு உறுப்பினர்.
3. திரு.சி.எல்.சரவணன் 22–வது வார்டு உறுப்பினர்.
4. திரு.க.ராஜாண்டியன் 23–வது வார்டு உறுப்பினர்.

**அறிக்கையாண்டில் அலுவலக பொறுப்பில் உள்ளவர்கள்:**
1. திரு.எம்.அய்யப்பன் பொறியாளர், ஆணையாளர்(பொ) 01.04.2021 முதல் 14.09.2021 வரை.
2. திரு.பி.ராஜேஸ்வரன் மேலாளர், ஆணையாளர்(பொ) 21.09.2021 முதல் 23.11.2021 வரை.
3. திரு.பு.ரா.பாலசுப்பிரமணியம் ஆணையாளர் 24.11.2021 முதல் 31.03.2022 வரை

4. திரு.எம்.அய்யப்பன், நகராட்சி பொறியாளர் 01.04.2021 முதல் 13.09.2021 வரை, திரு.எஸ்.பாண்டீஸ்வரி நகராட்சி பொறியாளர் 14.09.2021 முதல் 31.03.2021 வரை.
5. திரு.பி.ராஜேஸ்வரன் மேலாளர் 04.03.2022 முதல் 31.03.2022 வரை பணிபுரிந்து உள்ளனர்.

அறிக்கையாண்டில் கோவையில் உள்ள தமிழ்நாடு நகர் நிர்வாக பயிற்சி நிலையத்திற்கு 2021–22 ம் ஆண்டிற்கு நிர்வாக பங்குத் தொகையாக ரூ.75000/– செலுத்தப்பட்டுள்ளது.

**நிர்வாகம்**

ஆணையாளரின் கீழ் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கீழ்கண்ட பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

| வ.எண் | பதவி | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | மேலாளர் | – | 1 |
| 2. | கணக்கர் (உதவியாளர் நிலையில் | – | 1 |
| 3. | சத்துணவு திட்ட பிரிவு உதவியாளர் | – | 1 (5+9)சத்துணவுத்திட்டம் |
| 4. | இளநிலை உதவியாளர்கள் | – | 7 (காலி பணியிடம் 1) |
| 5. | தட்டச்சர் | – | 1 காலியிடம் |
| 6. | கணிணி உதவி திட்ட அமைப்பாளர் | – | 1 |
| 7. | பதிவறை எழுத்தர் | – | 2 (காலியிடம் 1) |
| 8. | அலுவலக உதவியாளர்கள் | – | 3 |
| 9. | இரவுக் காவலர் | – | 1 |
| | மொத்தம் | | 18 |

பணியாளர்கள் நியமனம், தண்டனை சம்மந்தமான விதிகள் கண்டிப்பான முறையில் அனுசரிக்கப்பட்டது. அறிக்கை ஆண்டில் மேல்முறையீடு செய்யக்கூடிய தண்டனைகள் வழங்கப்படவில்லை.

**பொறியியல் பிரிவு விபரம்**

இந்நகராட்சியில் நகர்மன்ற பொறியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு நகர் அபிவிருத்தி திட்டம் மற்றும் தண்ணீர் விநியோக வேலைகளை கவனித்து வருகிறார். நகராட்சி மாவட்ட தலைநகரமாக உள்ளதால், அபிவிருத்தி வேலைகள் அதிக அளவில் செயல்படுத்தப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

**பொறியியல் பிரிவில் கீழ்க்கண்ட அலுவலர்கள் பணியாற்றி வருகிறார்கள்:**

| வ.எண் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நகராட்சி பொறியாளர் | 1 |
| 2 | குடிநீர் திட்டக் கண்காணிப்பாளர் | 1 |
| 3 | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 1 |
| 4 | பணி ஆய்வர் | 1 |
| 5 | மின் பணியாளர் | 1 |
| 6 | குழாய் பொருத்துநர் | 1 |
| 7 | மின் கம்பியாளர் | 2 |
| 8 | மின் கம்பி உதவியாளர் | 3 |
| 9 | ஓட்டுநர் | 2 |
| 10 | தலைமை நீரேற்று நிலைய காவலர் | 1 |
| | **மொத்தம்** | 14 |

**சாலைகள்**

இந்நகராட்சியில் உள்ள மொத்த சாலைகளின் நீளம் 79.284 கி.மீ. அவைகளின் விபரம் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

1. தார்சாலை – 49.211 கி.மீ
2. சிமெண்ட் சாலைகள் – 5.521 கி.மீ
3. பேவர் பிளாக் சாலைகள் – 17.635 கி.மீ
4. மண்சாலைகள் – 6.917 கி.மீ

**மொத்தம் – 79.284 கி.மீ.**

மண்சாலைகளை தார்சாலைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள நெடுஞ்சாலைத்துறை பராமரிப்பில் உள்ள சாலைகளின் நீளம் 6.800 கி.மீ. ஆகும். .

**பேருந்து நிலையம்**

இந்நகராட்சியில் ஒரு பேருந்து நிலையம் புதியதாக ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப்பணித்துறையினரால் கீழ்க்கண்ட வசதியுடன் கட்டி முடிக்கப்பட்டு 01.09.1987 அன்று பொதுமக்களின் உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்பேருந்து நிலையத்தில் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் திட்டம் 2007–08ஆம் ஆண்டின் கீழ் பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. கீழ்க்கண்டுள்ள கடைகள் கட்டப்பட்டு பொது ஏலத்தில் விடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. சைவ உணவு விடுதி | – | 1 |
| 2. அசைவ உணவு விடுதி | – | 1 |
| 3. கடைகள் | – | 21 |
| 4. புக்கிங் ரூம் | – | 1 |
| 5. பூக்கடை | – | 1 |
| 6. இலவச கழிப்பறை | – | 1 |

பொதுமக்கள் தங்குவதற்காகப் பேருந்து நிலையத்தில் கிழக்கு மற்றும் மேற்குப்பகுதியில் பயணிகள் தங்கும் இடம் உள்ளது. மேற்கண்டுள்ள பேருந்து நிலையம் சிவகங்கையில் உள்ள வட்டாரப்போக்குவரத்து அலுவலர் அவர்களின் 14.06.2002 அன்று அ4–13548–01ம் எண் செயல்முறைகளின்படி சி பிரிவு பேருந்து நிலையமாக 13.06.2005 வரை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தொடர் அங்கீகாரம் 13.06.2014 வரை பெறப்பட்டது. அறிக்கை ஆண்டில் பேருந்துகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.8/– வீதமும் உல்லாச ஊர்திகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.10/– வீதமும் வசூல் செய்யப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் பேருந்துக்கு கட்டணம் ரூ.3,69,000ம் இதர இனங்கள் கடைகள் மூலம் ரூ.10,75,836ம் வருமானம் பெறப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் – 2021–2022**

தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2021–2022ன் கீழ் 225.00இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவுற்று மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2021–2022**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தன் கீழ் இந்நகராட்சிக்கு 319.00இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டிடம் கட்டுதல் பணி மற்றும் செக்கடி ஊரணி புரணமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**நமக்கு நாமே திட்டம் 2021–2022**

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு 36.00இலட்சம் மதிப்பீட்டில் 48 காலனி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் சமையலறைக் கட்டிடம் கட்டுதல் பணி முடிவுற்று பயன்பாடில் உள்ளது. சேவல்கட்டு ஊரணி புரணமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2021-22**

2021-2022ம் நிதியாண்டில் 53.00இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 8 பணிகள் தேர்வுசெய்யப்பட்டு 7 பணிகள் முடிவுற்று மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள ஒரு பணி நடைபெற்று வருகிறது.

**பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் அபிவிருத்தி திட்டம் 2021-22**

2021-2022ம் நிதியாண்டில் 6.00இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 2 பணிகள் தேர்வு செய்யப்பட்டு 1 பணி முடிவுற்று மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள ஒரு பணி நடைபெற்று வருகிறது.

**தூய்மை இந்தியா திட்டம்.2.0**

தூய்மை இந்தியா திட்டம்.2.0 திட்டத்தின் கீழ் 61.24இலட்சம் மதிப்பீட்டில் பேருந்துநிலையம் எதிர்புறம் பொதுக்கழிப்பறை கட்டிடம் கட்டுதல் மற்றும் அகிலாண்டபுரம் சமுதாயக்கழிப்பறை கட்டிடம் கட்டுதல் பணி நடைபெற்று வருகிறது.

**பேருந்து நிலைய பராமரிப்பு பணி**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022-2023ன் கீழ் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தின் உட்புறம் சேதமடைந்த சிமெண்ட் சாலைகளை சீரமைக்கவும் மானாமதுரை பேருந்துகள் வழிதடத்தில் உள்ள வணிக வளாக கட்டிடத்தினை இடித்து விட்டு புதிய கட்டிடம் கட்டவும் மதிப்பீடு ரூ.200.00இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

**புதிதாக வாரச்சந்தை அமைத்தல் பணி**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022-2023ன் கீழ் நகராட்சிக்குட்பட்ட நீதிபதி இராஜசேகரன் தெருவில் புதிதாக வாரச்சந்தை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.400.00இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**பயணியர் விடுதி** - இல்லை
**சத்திரங்களும் தண்ணீர் பந்தலும்** - இல்லை
**தளவாட சாமான்கள்:**

| | |
|---|---|
| 1.டம்பர் பிளேசர் | - 0 |
| 2. டிராக்டரும், டிரைலரும் | - 1 |
| 3. மினி லாரி | - 2 |
| 4. கழிவுநீர் ஊர்தி | - 1 |
| 5. தள்ளுவண்டி | - 40 |
| 6. BOV | - 24 |
| **மொத்தம்** | 68 |

**விளக்குகள்**

இந்நகராட்சியின் அறிக்கையாண்டில் 4 அடி குழல் விளக்கு 1350 எண்ணம், CFL விளக்குகள் 512 எண்ணம், LED விளக்குகள் 511 எண்ணம், T5 விளக்குகள் 81 எண்ணம் மற்றும் உயர்கோபுர விளக்குகள் 13 எண்ணம் மொத்தம் 2467 எண்ணம் நகராட்சியின் மூலம் பராமரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் உயர்நிலைப்பள்ளிகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

**ஆரம்பரக் கல்வி**

இந்நகராட்சியில் நிர்வகிக்கப்பட்டு வந்த மூன்று ஆரம்ப பள்ளிகளும் 01.01.19 முதல் கல்வி இலாகாவில் பராமரிப்புக்கு மாற்றப்பட்டுள்ளது.

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத்திட்டம்**

அரசு ஆணை எண்..1550 ஊர் வளர்ச்சி மற்றம் உள்ளாட்சித்துறை நாள்..09.10.1992ன் படி ஏற்கனவே நகராட்சி பராமரிப்பில் இருந்து வந்த சத்துணவு வழங்கும் திட்டம், நிர்வாகம், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் பொறுப்பின் கீழ் ஆணையரின் மேற்பார்வையில் செயல்பட்டு வருகிறது. நகராட்சி மூன்று பள்ளிகளிலும் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் பொறுப்பு பள்ளித் தலைமை ஆசிரியர்களால் பராமரிக்கப்பட்டு வந்ததை 01.02.1995ம் தேதி முதல் குழந்தைகள் நல அமைப்பாளர்கள் தனியாக நியமனம் செய்யப்பட்டு, அவர்களின் பொறுப்பில் இருந்து வருகிறது. 3 பள்ளிகளில் ஒவ்வொன்றிற்கும் ஒரு உதவியாளர், ஒரு சமையல் உதவியாளர் வீதம், பணிபுரிந்து வருகிறார்கள். இந்தக் கணக்குகளைப் பராமரிக்கவும், பார்க்கவும், இதற்கென சத்துணவு பிரிவு உதவியாளர் பணிபுரிந்து வருகிறார். வாரம் மூன்று முறை குழந்தை ஒன்றுக்கு ஒரு முட்டை வழங்கப்பட்டு வந்த திட்டம் அரசு ஆணை எண்..99 சமுதாய நலத்துறை (ம) சத்துணவுத் துறை நாள்..12.09.2001ன் படி, 30.10.2001ல் நிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் அரசு ஆணை எண்..95 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை நாள்..16.06.2004 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை கடிதம் ந.க.எண்..28555/2004/சதிநி2, நாள்..18.06.2004ன் படி வாரம் மூன்று முறை முட்டை வழங்கும் திட்டம் 28.06.2004 முதல் அமுலுக்கு வந்துள்ளது. தற்போது அரசாணை (நிலை) எண்:176 சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டம் (ச.உ.தி–3) துறை நாள்:17.09.2010 –ன்படி வாரத்தின் திங்கள் முதல் வெள்ளி கிழமை வரை ஒரு மாணவருக்கு ஒரு முட்டை வீதம் ஐந்து நாட்களுக்கும் வேக வைத்து தினமும் சமைக்கப்படும் கலவை சாதம் மற்றும் முட்டை மசாலா வகைகளுடன் மதிய உணவுகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு சமூக நலம் மற்றும் சத்துணவு நிதித் துறையில் மேற்படி தலைப்பில் ரூ.900000/– வரவும் ரூ.882000/– செலவும் ஆகிறது.

**பொது சுகாதாரம்**

இந்நகர் மன்றத்தினால் மருந்தக சாலையோ, மருந்தகமோ பராமரிக்கப்படவில்லை.

**சுகாதார பணிகள்.**

அறிக்கை ஆண்டில் கீழ்கண்ட பணியாளர்கள் வேலை பார்த்து வந்தனர்

| வ.ண் | பதவி | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | துப்புரவு அலுவலர் | – | 1 |
| 2. | மகப்பேறு உதவியாளர் | – | 1 |
| 3. | துப்புரவு ஆய்வாளர் | – | 1 |
| 4. | ஆயா | – | 1 |
| 5. | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | – | 3 (காலிப் பணியிடம்–1) |
| 6. | டிராக்டர் டிரைவர் | – | 1 |
| 7. | லாரி டிரைவர் | – | 1 |
| 8. | கழிவுநீர் ஊர்தி டிரைவர் | – | 1 |
| 9. | லாரி கிளீனர் | – | 1 |
| 10. | கொசு ஒழிப்பு மஸ்தூர் | – | 3 ( 2 காலிப்பணியிடம்) |
| 11. | துப்புரவு தொழிலாளர்கள் | – | 73 (31 காலிப்பணியிடம்) |
| 12. | மயானக் காவலர் | – | காலிப்பணியிடம் |

**சுகாதார அலுவலர்**

சுகாதார அலுவலர் பதவி (MHO) இந்நகராட்சியில் இல்லை. அதன்பின் இந்நகராட்சியில் உள்ள ஆய்வாளரின் பணியிடம் துப்புரவு அலுவலராகப் பணி உயர்வு செய்து அரசு ஆணை பிறப்பித்தற்கிணங்க இந்நகராட்சியில், ஒரு சுகாதார ஆய்வர் பணியிடத்தில் துப்புரவு அலுவலர் நியமித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அரசின் 04.11.89ம் தேதிய அரசாணை எண்..2037 (சுகாதாரம்) யானைக்கால் வியாதி தடுப்புத் திட்டம் செலவில் 1/3 பாகம் மானியத்துடன் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 27.09.1988ம் தேதிய அரசாணை எண்..1525 (சுகாதாரம்) படி 9.12.1988 முதல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு களப்பணியாளரும் அனுமதிக்கப்பட்டு உள்ளார்கள். மேற்படி திட்டம் துப்புரவு அலுவலரின் மேற்பார்வையில் நடைபெற்று வந்தது. தினசரி கால அட்டவணைப்படி 6 நாட்கள் கொண்ட கால அட்டவணை கொசு ஒழிக்கும் பணிக்கு "fogging– பைரீத்ரம் Extract 2%, அபேட் மருந்து, பைத்தின் ரெடிமிக்சர் (0.5%) "பயன்படுத்தப்பட்டது. மேலும் துப்புரவு பணியாளர்கள் DDHS தற்காலிக பணி பார்க்கப்பட்டு வருகிறது.

**மருத்துவ படுக்கை வசதிகள் மருத்துவமனை இட வசதிகள்:– – இல்லை –**

**பொதுசுகாதார மேற்பார்வை:**

இந்நகராட்சியில் சுகாதார அதிகாரி பதவி இல்லை. தற்போது துப்புரவு அலுவலர் 22.06.1990 முதல் நியமிக்கப்பட்டு சுகாதாரப் பணியாளர்கள் மேற்படியாரின் நேரடிப்பார்வையிலும், ஆணையரின் மேற்பார்வையிலும் பணியாற்றி வருகிறார்கள்.

**பிறப்பு இறப்பு**

1. அறிக்கையாண்டில் இந்நகராட்சி எல்லைக்குள் 665 குழந்தைகள் பிறந்துள்ளன. கடந்த ஆண்டு 817 குழந்தைகள் பிறந்துள்ளன.

2. 23.07.1967ம் தேதி அரசாணை எண்..116– (சுகாதாரம்) தாய் சேய் நல விடுதி ஒன்று நடத்த அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி இந்நகராட்சியால் 06.11.97ம் தேதி முதல் தாய் சேய் நல விடுதி ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. தேர்ச்சி பெறாத அனுபவதாரர்களால் பிரசவங்கள் பார்க்கப்படவில்லை.

இந்நகராட்சியில் மகப்பேறு நிலையக்கட்டிடம் கட்ட அரசு ரூ.3.00 இலட்சம் அனுமதித்துள்ளது. ரூ.4.50 லட்சம் செலவில் மகப்பேறு நிலையம் கட்டி முடிக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகிறது. இவ்வகைக்கு ரூ.3.00 இலட்சம் அரசு மான்யம் பெறப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் 768 கர்ப்பிணி தாய்மார்களுக்கு டெட்டனஸ் தடுப்பு ஊசியும் 769 குழந்தைகளுக்கு பிசிஜி தடுப்பு ஊசியும் போடப்பட்டது. மேலும் இளம்பிள்ளை வாத நோய் நம் நகரில் முற்றிலும் ஒழிப்பதற்கு, இரண்டு சிறப்பு போலியோ சொட்டு மருந்து முகாம்கள் நடத்தப்பட்டன. அதன்படி 10.01.2021 அன்று 6921 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்டன.

**தொற்று நோயால் இறந்தவர்கள்**

அறிக்கையாண்டில் 19 நபர்கள் கோவிட்–19 இறந்துள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| 1. | காய்ச்சல் | – |
| 2. | வயிற்றுப்போக்கு | – |
| 3. | சஷயரோக வியாதி | – |
| 4. | அம்மையால் இறந்தவர்கள் | – |
| 5. | மற்றவர்கள் | – |
| 6. | அறிக்கையாண்டில் பிளேக் நோயால் இறந்தவர்கள் | – |
| 7. | இன்புளுசயன்சா நோயால் இறந்தவர்கள் | – |
| 8. | கோவிட் – 19 | –19 |

**சுகாதாரம்**

ஒரு சுகாதார அலுவலரைக்கொண்டு நகரில் உள்ள சுகாதார சம்மந்தப்பட்ட வேலைகளும் கவனிக்கப்பட்டு வருகிறது. ஒரு சுகாதார ஆய்வர் மற்றும் நான்கு துப்புரவு மேற்பார்வையாளர்கள் சுகாதார ஆய்வருக்கு உதவியாக இருந்து வருகிறார்கள். இந்நகராட்சியில் 12 பொது சுகாதார கழிப்பிடங்கள் உள்ளன. மொத்தம் 12 சுகாதார கழிப்பிடங்களில் மொத்தம் 40 இருக்கைகள் உள்ளன. இவற்றில் பழுதடைந்து உள்ள பொது கழிப்பறைகள் அனைத்தும் பழுதுநீக்கம் செய்து, தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**கலப்பு உரம்**

சிவகங்கை நகரில் அன்றாடம் சேரும் குப்பைகளை, தனியார் மயம் மூலம் 2009ம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டு, பிளாஸ்டிக் கூடைகளுடன் தள்ளு வண்டிகளில் ஒரு இடத்தில் சேகரித்து பின்பு லாரி, டிராக்டர், டில்லர் மூலம் கலப்பு உரக்கிடங்கிற்கு எடுத்துச்செல்லப்படுகிறது. கலப்பு உரக்கிடங்கில் விஸ்தீரணம் 13.41 ஏக்கர். இவ்வுரகிடங்கு நகரின் தெற்கு புறத்தில் இருக்கிறது. குறைந்த செலவிலான கழிப்பறை கட்டும் திட்டம் முடிக்கப்பட்டுள்ளது. எனவே மனிதக் கழிவுளை சேகரிப்பு கிடையாது. ஆதலால் அறிக்கையாண்டில் கலப்பு உரம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கலப்பு உரம் தயாரிக்க அரசாங்க மான்யம் ஏதும் பெறவில்லை.

சாக்கடை கழிவுநீரை அகற்றி அதை கலப்பு உரக்கிடங்கில் தண்ணீராகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது உள்ள கலவை உரக்கிடங்கைச் சுற்றிலும் குடியிருப்பு பகுதிகள் அதிகரித்துள்ளதால், மேற்படி கலவை உரக்கிடங்கில் குப்பைகளை கொட்டி உரம் தயாரிக்க இயலவில்லை. புதியதாக கலவை உரக்கிடங்கு அமைக்க நிலம் சுந்தர நடப்பு கிராமத்தில் 13.41 ஏக்கர் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

மற்றும் சுந்தர நடப்பு கிராம மக்கள் இங்கு குப்பைகள் கொட்டக்கூடாது என ஆட்சேபணை தெரிவித்து உயர்நீதி மன்ற கிளை, மதுரையில் வழக்கு எண்..1231/2006ல் வழக்கு தொடர்ந்து மேற்படி உயர்நீதி மன்ற வழக்கு நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வரப்பெற்றுள்ளது. சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் சமாதான கூட்டம் நடத்தி குப்பைகளை கொட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது மக்கும் குப்பை, மக்காத குப்பை என தனியாக பிரித்து குப்பைகளை சுந்தர நடப்பில் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. மேலும் மரக்கன்றுகள் நடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அடியிற்கண்ட உபகரணங்கள் மூலம் நகரில் உள்ள சுகாதார வேலைகள் கவனிக்கப்பட்டு வருகிறது.**

1. டிராக்டர் டிரையிலர் – 1
2. மினிலாரி – 2
3. கழிவுநீர் டாங்கர் லாரி – 1
4. தள்ளுவண்டி –40
5. காம்பேக்டர் – 1

அடிப்படை வசதித் திட்டத்தின் கீழ் துப்புரவுப் பணிக்கு கழிவுநீர் டாங்கர் லாரி வாங்கப்பட்டுள்ளது.

15984 வீடுகளில் செப்டிக் டாங்க் 12125 வீடுகளில் உள்ளது.

**(ஆ) இலவச சிறுநீர் கழிப்பிடங்கள்**

அறிக்கையாண்டில் இந்நகரில் 5 இலவச சிறுநீர் கழிப்பிடங்கள் உள்ளன. மேற்படி கழிப்பிடங்கள் பகுதி–II திட்டத்தின் கீழ் ரூ.2.00 இலட்சத்தில் பராமரிப்பு பணி செய்யப்பட்டுள்ளது.

**(இ) கலப்பட தடுப்புச் சட்டம்**

இந்நகரில் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் பயிற்சி பெற்ற உணவு ஆய்வர் இல்லாததால் உணவு மாதிரிகள் எடுக்கப்படவில்லை.

**அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில் உரிமம்**

நகராட்சி எல்லைக்குள், விண்ணப்பம் செய்யும் வியாபாரிகளிடம் இருந்து அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான எல்லா தொழில்களுக்கும், நகராட்சி சட்டப்பிரிவு 249, 250 & 259ன் படி உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் இத்தலைப்பின் கீழ் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்ட உரிமம் வகையில் அபாயகரமானதும் அருவருக்கத்தக்க தகுந்த தொழில் உரிமம் ரூ.46000/– வசூல் செய்யப்பட்டது.

**பல்வகைப்பட்ட வருமானங்கள்: மார்கெட் (சந்தை)**

அறிக்கை ஆண்டில் சந்தைகளை ஏலத்தில் விடப்பட்டதில் கீழ்கண்ட விபரத்திற்கு ஏலத்திற்கு சென்றுள்ளது.

| வ.எண் | இனம் | 2020–2021 | 2021–2022 | 2022–2023 |
|---|---|---|---|---|
| 1 | வாரச்சந்தை | 1799831 | 2019000 | 2119980 |
| 2 | தினசரி சந்தை | 751078 | 255000 | 267750 |

**ஆடடிசாலை:**

இந்நகர் 23–வது வார்டு தெற்கு மார்கெட்டில் ஒரு ஆடடிசாலை உள்ளது. அதை குத்தகைக்கு விடப்பட்டு வருகிறது. கால்நடை உதவி மருத்துவர் மேற்பார்வையில் ஆடுகள் பரிசோதிக்கப்பட்டு, அதன்பிறகு அறுக்கப்பட்டு பின் முத்திரையிட்டு வருகிறது. மூன்றாண்டுகளில் பெறப்பட்ட குத்தகை விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

2020–2021 – 1,39,150
2021–2022 – 1,08,500

**சிவகங்கை குடிநீர்த்திட்டம்:**

அரசின் 13.01.1973ம் தேதிய அரசு ஆணை எண்:1251–ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், சிவகங்கை நகராட்சியும் மற்றும் 6 வழிப்புற கிராமங்களுக்கும் சேர்த்து ரூ.49.74 லட்சம் செலவில் ஆன குடிநீர் விநியோகத் திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. மேற்படி திட்டம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் கடனுதவியிலும்

அரசுக் கடனுதவியிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டப்பணிகளுக்கு அரசுக் கடன் ரூ.16.17 லட்சம் ஆயுட் காப்பீட்டுக் கழகம் கடன் ரூ.33.57 லட்சம் ஆக மொத்தம் ரூ.49.74 லட்சம் கடன் வாங்கப்பட்டு அத் தொகை முழுவதும் குடிநீர் வாரியத்தினரால் செயல்படுத்தப்பட்டுள்ளது.

22 கீ.மீ தொலைவில் உள்ள இடைக்காட்டூர் என்ற இடத்திற்கு அருகே உள்ள வைகை ஆற்றில் கிணறு தோண்டி அதில் 75 குதிரை வேக மின்மோட்டார் அமைத்து, பம்பிங்க் ஸ்டேசன் கட்டி அதை தலைமை நீரேற்று நிலையமாக அமைத்து அதிலிருந்து பம்பிங் ஸ்டேசன் மூலம் இந்நகருக்கு மதுரை ரோட்டில் கட்டப்பட்டுள்ள குடிநீர்த்தேக்க தொட்டிக்கு தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. இத்திட்டம் 1975-ம் ஆண்டில் முடிவடைந்துள்ளது.

மேற்படி திட்டத்தில் உண்டாகும் வருட பராமரிப்புச் செலவினங்களை செலுத்த மன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது. வழியோர சாலை கிராமங்கள் வாணியங்குடி, குட்டித் திண்ணி, தெக்கூர், பெரியகோட்டை, கீழக்கண்டனி, வைரவன் பட்டி, ஆகிய ஆறு கிராமங்களுக்கும் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக திட்ட ஆரம்பத்தில் இருந்து இதுநாள் வரையிலும் பராமரிப்பு செலவுத் தெகையோ அல்லது தண்ணீர் கட்டணத் தொகையோ இவ்வூராட்சிகள் செலுத்தவில்லை. நிலுவையாக உள்ள பணத்தைச் செலுத்தக்கோரி சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்கும் மானாமதுரை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கும் கடிதம் எழுதப்பட்டு நினைவூட்டப்பட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ளது.

சிவகங்கை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து நகருக்கு தண்ணீர் வழங்கும் பணி நகராட்சியில் இடைக்காட்டூர் நீரேற்று நிலைய பராமரிப்புகள் 15.11.1981 முதல் நகராட்சியில் ஒப்படைக்கப்பட்டு மேற்படி பணி நகராட்சியினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி திட்டத்தின் கீழ் இந்நகராட்சியில் 42 பொதுக்குடிநீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் குடிநீர் வழங்குதுறை விதிகள் மன்றத்தின் ஒப்புதல் பெற்று மதுரை குடிநீர் வடிகால் வாரியத்தின் கண்காணிப்புப் பொறியாளரது அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. தற்பொழுது இந்நகரில் குடியிருப்பவர்களுக்கு வீடுகளில் குழாய்கள் மூலம் குடி தண்ணீர் 1975-ம் வருட ஏப்ரல் மாதம் முதல் கொடுக்கப்பட்டு வருகிறது. அலுவலர்கள், வியாபார இடங்கள் ஆகியவற்றிற்கு அளவு மானிய முறையிலும், வீடுகளுக்கு ஏற்கனவே, கொடுக்கப்பட்ட இணைப்புகளுக்கு மாதம் ரூ.100/- வீதமும் காலாண்டுக்கு ரூ.10/- பராமரிப்பு கட்டணமாக மொத்தம் ரூ.300/- வீதமும் பின்னர் வழங்கப்பட்ட இணைப்புகளுக்கு அளவுமானிய முறையில் 1000 லிட்டருக்கு ரூ.16/- வீதமும் குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் முடிவுவரை 5775 குழாய் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. வீட்டு உபயோகத்திற்கு அல்லாத குழாய் இணைப்புகள் 160 இதில் அடங்கும். இத்திட்டத்தினால் நகரிலுள்ள அனைத்து பொதுமக்களுக்கும் குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர ஆறு மேல்நிலைத் தொட்டிகளும் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட ஒரு மேல்நிலைத் தொட்டியும், நகராட்சிப் பராமரிப்பில் இருந்து வருகிறது. இந்த மேல்நிலை நீர்த் தேக்கத்

தொட்டிகளில் இருந்து 42 பொதுக்குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கூறிய பொதுக்குழய்களில் வரும் தண்ணீர் சேகரிக்ககப்பட்டு அடியிற்கண்ட படி குழாய்களின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

| | குழாய்கள் எண்ணம் | தொட்டியின் கொள்ளவு (லிட்டரில்) |
|---|---|---|
| அ.செட்டியூரணி மேற்குப்புறத் தொடி | 12 | 10,000 |
| ஆ.செட்டியூரணி கிழக்குப் புறத் தொட்டி (3) | 22 | 10,000 |

மேல்நிலைத் தொட்டிகளும், ஊரணிகளும் ஐந்து காவலர்கள் பராமரிப்பில் உள்ளன.

அறிக்கையாண்டில் தண்ணீர் விநியோகத்திற்கு சிப்பந்திகள் சம்பளம் உட்பட ரூ.7162871/- செலவாகியுள்ளது. கடந்த ஆண்டில் ரூ.6511701/- செலவாகியுள்ளது.

அரசு ஆணை எண்:146 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள்:01.12.2006-ன் படி இந்நகராட்சிக்கு இராமநாதபுரம் கூட்டுக்குடிநீர் திட்டத்தில் ரூ.32.80 கோடி திட்ட மதிப்பீட்டில் குடிநீர் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் 2021-22**

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் 2021-2022ன் கீழ் 225.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவுற்று மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2021-2022**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2021-2022ன் கீழ் இந்நகராட்சிக்கு 319.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டிடம் மற்றும் செக்கடி ஊரணி புனரமைப்பு நடைபெற்று வருகிறது. 219.00 இலட்சம், செட்டி ஊரணி பரனமைக்கும் பணி நடைபெற்று வருகிறது மற்றும் குண்டூரணி, லெட்சுமி தீர்த்தம் ஊரணிக்கு 22.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

**நமக்கு நாமே திட்டம் 2021-2022:**

நமக்கு நாமே திட்டம் 2021-2022 ன் கீழ் 36 இலட்சம் மதிப்பீட்டில் 48 காலனி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் சமையலறை கட்டிடம் கட்டுதல் பணி முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது. சேவல்கட்டு ஊரணி புனரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**நமக்கு நாமே திட்டம் 2022-2023**

நமக்கு நாமே திட்டம் 2022-2023 ன் கீழ் 21.50 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்:18, 19, 21,27 ஆகிய வார்டுகளில் 12 மீட்டர் உயரமுள்ள மினி தெரு விளக்கு அமைத்தல் பணி நடைபெற்று வருகிறது.

**தூய்மை இந்தியா திட்டம் 2.0:**

தூய்மை இந்தியா திட்டம் 2.0 ன் கீழ் 61.24 லட்சம் மதிப்பீட்டில் பேருந்துநிலையம் எதிர்புறம் பொதுக்கழிப்பிடம் கட்டிடம் கட்டுதல் மற்றும் அகிலாண்டபுரம் சமுதாயக் கழிப்பறை கட்டிடம் கட்டுதல் பணி நடைபெற்று வருகிறது.

**வடிகால் மற்றும் பாதாள சாக்கடைத்திட்டம்**

**பொதுமக்களின் சுகாதார பாதுகாப்பு**

இந்நகரில் தெருக்களையும்,ரோடுகளையும் சிமிண்ட் கான்கிரிட் தார்,சிமெண்ட் சிலாப் பதித்தல் வேலைகள் மூலம் தெருக்களில் ரோடுகளில் தூசி படியாத வண்ணம் பாதுகாக்கப்படுகிறது. இந்நகரில் நகராட்சி உரிமை பெறப்படாத நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டு வருகிறது. தெருவில் அலையும் பன்றிகளை அப்புறப்படுத்தும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதன் தொடர்பாக தொற்று நோய்களைத் தடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**பொதுசுகாதரம்**

தேவையான சுகாதார வசதிகள் பொதுமக்களுக்கு அறிக்கை ஆண்டில் திருப்திகரமாகச் செய்யப்பட்டுள்ளது.

துப்புரவுத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் நன்றாக உள்ளது. வேலையில் பூரணமாக ஒத்துழைத்தார்கள். துப்புரவு தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்பட்டு அவைகள் துப்பரவுத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

**பயன்தரத்தக்க தொழில்கள்**

இந்நகராட்சியின் கீழ் ஒரு வாரச்சந்தையும் ஒரு தினசரிசந்தையும் ஒரு ஆடறுப்பு மனையும், ஒரு பேருந்து நிலையமும் இருந்து வருகிறது. மற்றும் மத்திய ஒருங்கிணைந்த நகர் அபிவிருத்தித் திட்டத்தில்கட்டப்பட்ட கடைகளை ஏலம் விட்டும் கிட்டங்கினை வாடகைக்குக் கொடுக்கப்பட்டும் வருமானம் பெறப்பட்டு வருகிறது.

**வண்டிப்பேட்டை**

இந்நகராட்சிக்கு சொந்தமான வண்டிப்பேட்டை கிடையாது.

**பேருந்துநிலையம்**

இந்நகராட்சியால் ஒரு பேருந்து நிலையம் ('சி' வகுப்பு) அனைத்து வசதிகளுடன் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**மரம் வளர்ப்பு**

இந்நகர் எல்லைக்குள் நகராட்சிக்குச் சொந்தமான மொத்தம் 625 மரங்கள் உள்ளன. அவைகளில் 12 பலன்தரும் மரங்கள் உள்ளன. அறிக்கையாண்டியல் கேட்பு இல்லை.

**பூங்காக்கள்**

இந்நகராட்சியில் 23 பூங்கா மற்றும் திறவிடங்கள் உள்ளது. இராமச்சந்திரன் நினைவு பூங்கா நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஒரு தோட்ட பாதுகாவலர் வேலை செய்து வருகிறார். ஆர்.எஸ்.வி.ஓய், திட்டத்தின் கீழ் ஆறு பூங்காக்கள் அழகுற அமைக்கப்பட்டு வங்கிகள் மற்றும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

**வானொலி** வானொலி ஏதும் இல்லை

நகராட்சி பேருந்து நிலையத்தில் ஒரு இலவச கழிப்பிடமும் நகரின் பிற இடங்களில் இரண்டு நவீன கட்டணக் கழிப்பிடங்களும் பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் நவீனக் கட்டணக் கழிப்பறையில் கட்டணங்கள் வசூலிக்கும் உரிமையை குத்தகை மூலம் விடப்பட்டது. அதன் மூலம் ரூ.69,825/– வருமானம் பெறப்பட்டு வருகிறது

**மீன் குத்தகை**

அறிக்கையாண்டில் இரண்டு ஊரணிகளில் மீன்பிடிக்கும் உரிமையை ஏலம் 2021–2024ம் ஆண்டிற்கு விடப்பட்டது.

**கலையரங்கம்**

இந்நகராட்சியில் சண்முகராஜா கலையரங்கம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கலையரங்கம் பொதுமக்கள் வசதிக்காக பொதுக் கூட்டங்களுக்கு வாடகைக்கு விடப்படுகிறது. இதன் மூலம் அறிக்கை ஆண்டில் ரூ.45000/– வருமானமும் வந்துள்ளது'

**நகரமைப்பு**

நகரமைப்பு ஆய்வாளர் கட்டிட விண்ணப்பங்கள் புதிய கட்டிட விதிகள் 2019ன் படி இணையதளம் வாயிலாக கட்டிட அனுமதி வழங்கியும், சம்மந்தப்பட்டவைகளையும் கவனித்து வருகிறார்கள். தமிழ்நாடு அரசு இந்நகரத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் முழுமை வரைவு நகர அமைப்புத் திட்டம் (மாஸ்டர் பிளான்) படத்துடன் தயாரித்து தனது 7–4–1977ம் தேதி அரசு அறிவிப்பு எண்„47909 எம்.டி.77/1–ல் அனுப்பி அதைச் செயலாற்ற மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறு அனுப்பி வைத்தது, மற்றும் திருத்திய முழுமைத்திட்டம் வரைபடம் 1995–ல் அனுப்பப்பட்டு இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது. சிவகங்கை நகருக்குரிய மறு ஆய்வு முழுமைத் திட்டம் அரசாணை

எண்.134 வீட்டு வசதி மற்றும் நகர்ப்ற வளர்ச்சி துறை நாள்..21.04.2005–ல் அனுமதி வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மற்றும் இந்நகரத்தில் 1 முதல் 17 வரை அபிவிருத்தித் திட்டங்களாகப் பிரிக்கப்பட்டு 1 முதல் 14 வரை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நில உரிமையாளர் நல கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. 1 முதல் 14 வரை அபிவிருத்தி திட்டங்கள் இணக்கம் பெறப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. அதன் படி உள்ளூர் அதிகாரக்குழு ஒன்று அமைத்து அத்திட்டத்தை பரிசீலனை செய்ய அடியில் கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றி மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சிவகங்கை நகரத்தை வசிப்பிடப்பகுதி, வியாபாரம், தொழிற்சாலை, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து சாதனங்கள், தண்ணீர் மற்றும் வடிகால் முதலிய வசதிகள் அமைத்து அபிவிருத்தி செய்ய முழுமைத் திட்டம் விரிவு அபிவிருத்தி திட்டம் அடங்கியவையாகும்.

தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் SUSV (NULM) மீதான சாலையோர வியாபாரிகளுக்கான அடையாள அட்டை வழங்குதல், வங்கி கடன் பெற்று தருதல் போன்ற பணிகளை கவனித்து வரப்படுகிறது. மேலும் நகப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் NULM–98 பயனாளிகளுக்கு ரூ.84.44 லட்சம் மதிப்பீட்டில் வாகனங்கள் பெற்றுத் தரும் பணிகளும் கவனித்து வரப்படுகிறது.

**விரிவான நகர சர்வே அளவு**

இந்நகரத்தை விரிவான வகையில் சர்வே அளவுத் துறையினரால் செய்து முடிக்கப்பட்டு நில அளவை ஆவணங்கள் பெறப்பட்டுள்ளது. மேலும் நில அளவை சம்மந்தமான பணிகளுக்கு வருவாய்த்துறையைச் சேர்ந்த நில அளவர் பொறுப்பில் இருந்து வருகிறார்.

**ஆக்கிரமிப்புகள்**

இத்தலைப்பின் கீழ் ஒரு நகர அளவரும், ஒரு புல உதவியாளரும், 2/3 நகராட்சி பங்குத் தொகையுடன் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியின் உத்தரவின் பேரில் நகராட்சியில் நியமிக்கப்பட்டு இந்நகரின் புல அளவை மற்றும் ஆக்கிரமிப்புகளைக் கவனித்து வருகின்றனர்.

**தற்காலிக ஆக்கிரமிப்பு**

இந்நகராட்சியின் நகரளவர் மற்றும் நகரமைப்பு ஆய்வர் ஆகியோருக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு அவ்வவ்போது ஏற்படும் தற்காலிக ஆக்கிரமிப்புகளை உடனே அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**வருவாய் கணக்கு**

இந்நகராட்சியில் சொத்து வரி விகிதப்படி 01.10.1998 முதல் 31.03.2022 வரை ஆண்டுக்கு 15.25% சதவிகிதமாக வசூலித்து வரப்படுகிறது.

| | |
|---|---|
| 1. பொதுக் காரியங்களுக்கான வரி | –7% |
| 2. குடிநீர் வரி | – 5.5% |
| 3. கல்வி வரி | – 1.5% |
| 4. நூலக வரி | – 1.25% |
| மொத்தம் | 15.25% |

**2021–2022–ம் ஆண்டில் வசூல்**

| | |
|---|---|
| 1. சொத்துவரி | – ரூ.210.84 இலட்சம். |
| 2. தொழில்வரி | – ரூ. 82.99 இலட்சம். |
| மொத்தம் | –ரூ.293.83 இலட்சம் |

**வரி விதிப்பில் கீழ்கண்ட விபரங்கள்**

| | |
|---|---|
| 1. நபர் ஒன்றுக்கு வரி விகிதம் (மக்கட் தொகையில் ) | – 190 |
| 2. ஒரு கட்டிடத்திற்கு வரி | – 610 |
| 3. ஒரு நபருக்கு தொழில் வரி | – 21 |
| 4. ஒரு நபர் வருமானம் ஒவ்வொரு அரையாண்டிற்கும் அரசு மான்யம் நீங்கலாக | – 521 |

**வழக்குகள்**

இந்நகராட்சியில் அறிக்கை ஆண்டில் ஆரம்பத்தில் 3 வழக்குகள் நிலுவை இருந்தன. நடப்பு ஆண்டியல் 2 வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டின் இறுதி வரை 5 வழக்குகள் ஏதும் முடிக்கவில்லை. ஆண்டு இறுதியில் 4 வழக்குகள் நிலுவையில் இருந்தன. விரைவில் முடிவு எடுக்கத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தணிக்கை தடைகள்**

| | |
|---|---|
| 01.04.2021ல் நிலுவைப் பத்திகள் | – 508 |
| நீக்கம் செய்யப்பட்டவை | – 140 |
| தற்போது நிலுவையில் உள்ளவை | – 368 |

**குடும்ப நலத்திட்டம்**

குடும்ப நலத்திட்டத்தைப் பொறுத்தமட்டில் குடும்ப நலத்துறையினர் பார்த்து வருவதால் குறியீடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

**கொடிநாள் வசூல்:**

கொடிநாள் வசூல் இந்நகராட்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ரூ.2.55 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி குறியீட்டில் ரூ.1.50 இலட்சம் வசூல் செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டது.

**புதிய கணக்கு முறை நடைமுறைப்படுத்துதல் வீதம்**

இந்நகராட்சியில் 2016–2017ம் ஆண்டு முதல் UTIS (Urban Tree Information System) நடைமுறைப்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இப்புதிய மென்பொருள் முறையீன் கீழ் இந்நகராட்சி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் வரவினங்கள் மற்றும் செலவினங்கள் வகைப்படுத்தப்பட்டு கணக்கிடப்படுகிறது.

**ஆண்டுக்கணக்கு**

2020–2021ம் ஆண்டுக்கான கணக்கு இறுதி செய்யப்பட்டு ஆண்டுக் கணக்கு 05.04.2022ல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

**கணினி மயமாக்குதல்:**

**புதிய கணக்கு முறை நடைமுறைப்படுத்துதல் வீதம்**

இந்நகராட்சியில் 2016–2017ம் ஆண்டு முதல் UTIS (Urban Tree Information System) நடைமுறைப்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இப்புதிய மென்பொருள் முறையீன் கீ இந்நகராட்சி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் வரவினங்கள் மற்றும் செலவினங்கள் வகைப்படுத்தப்பட்டு கணக்கிடப்படுகிறது.

இக்கணக்கு முறையினை செயல்படுத்த அவ்வப்போது வழங்கப்படும் பயிற்சிகளில் பெரும்பான்மையான பணியாளர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

**கணினி மயமாக்குதல்:**

இந்நகராட்சி ஆவணங்கள் மற்றும் கடித தொடர்பு அனைத்தையும் கணினி மயமாக்கும் நோக்கத்தில் இத்திட்டத்தின் கீழ் உதவி திட்ட அமைப்பாளர் ஒருவர் பணிபுரிகிறார்.

நகராட்சியில் பதியப்படும் அனைத்து பிறப்பு இறப்பு, இறந்து பிறந்த குழந்தைகள் பதிவுகள் அனைத்தும் நாள்தோறும் பதியப்பட்டு சான்றிதழ்கள் அனைத்தும் கணினி மூலம் நகல் எடுக்கப்பட்டு காலதாமதம் இல்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. பிறப்பு இறப்பு சான்றிதழ் 2017ம் ஆண்டு வரை https://tnurbaneseva.tn.gov.in என்ற இணைய வழி வழியாக வழங்கப்படுகிறது. 2018ம் ஆண்டிலிருந்து http://gccapp.chennaicorporation.gov.in என்ற இணையவழி வழியாக பிறப்பு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

நகராட்சியின் வரவு செலவு கணக்கீடுகள் அனைத்து செலவுச் சீட்டுகள் (Vouchers) கணினியில் பதியப்பட்டு ஒவ்வொரு மாதமும் ஐந்தொக (Trial Balance) எடுக்கப்பட்டு வருகிறது. ஆண்டு வரவு செலவு திட்ட அறிக்கை இணையதளத்தில் பதியப்பட்டுள்ளது.

இவ்வலுவலகத்திற்கென E-mail ID உள்ளது. E-mail விலாசம் commr.sivagangai@tn.gov.in ஆகும் இதன் மூலம் மண்டல நிர்வாக இயக்குநர் அலுவலகம், நகராட்சி நிர்வாக ஆணையர், மாவட்ட ஆட்சியர் மற்றும் TNUDP III ஆகிய அலுவலகங்களும் E-mail மூலம் அறிக்கைகள் அனுப்பப்படுகிறது.

இ-மெயில் என்பது மின் அஞ்சல் ஆகும். இதன் மூலம் பெறப்படும் கடிதங்களுக்கான பதில்களும் இ-மெயில் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. மேலும் 01.04.2016 முதல் UTIS நெட்வொர்க் செய்யப்பட்டு நம் நகராட்சியில் உள்ள கணினியில் உள்ள விபரங்கள் அனைத்தும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் செயலர் ஆகியோர்கள் இருக்குமிடத்தில் உள்ள கணினியில் தெரிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டு உள்ளது. சொத்துவரி, தண்ணீர் கட்டணம், தொழில்வரி மற்றும் வரியற்ற இனங்கள் ஆகிய இனங்களுக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஒரு Facilitation Counter மூலம் உடனடியாக ரசீது பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நகர் பகுதி மக்களின் வசதிக்காக இ-மெயில் இணைப்புடன் கூடிய கணினி வைத்திருப்பவர்கள் இந்நகராட்சியிலிருந்து செயல்படுத்தப்படவுள்ள தகவல் மையம், வசூல் மையம் போன்றவைகளும் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் குறைதீர்க்கும் மனு ஆகியவைகளை அவர்கள் இருக்குமிடத்தில் இருந்து கணினி மூலம் தெரிந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**கணினி பிரிவு செயல்படும் விதம்:**

சிவகங்கை நகராட்சி அலுவலகத்தில் கணினி பிரிவிற்கென ஒரு திட்ட உதவி அமைப்பாளருடன் செய்லபட்டு வருகிறது. முதன் முதலாக 01.07.2000 தேதி முதல் பிறப்பு இறப்பு சான்றிதழ் கணினி மூலம் வழங்கப்பட்டு வருகிறது. 01.04.2003ல் அனைத்து புதிய மென்பொருள் அறிமுகப்படுத்த்தப்பட்டு சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி, வரியில்லா இனங்கள் மற்றும் இதர இனங்கள் கணினி வழியாக செயல்படுத்தப்பட்டு வந்தது.

சொத்துவரி சம்பந்தமான பதிவு கணினி மூலம் ஆன் லைன் செய்யப்பட்டு 11.08.2003ம் தேதியில் இருந்து அலுவலகத்தில் கணினி மூலம் சொத்து வரி இரசீது கொடுக்கப்பட்டு வருகிறது. தண்ணீர் கட்டணம் 09.02.2004ம் தேதி முதல் ஆன் லைன் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு உடனுக்குடன் நிலுவை விபரங்கள் தெரிவிக்கப்பட்டு உடனுக்குடன் பணம் கட்டியவர்களுக்கு ரசீது கொடுக்கப்பட்டு வருகிறது. இதேபோல் வரியற்ற இனம், தொழில்வரி இனங்களுக்கும் கணினி மூலம் வசூல் செய்யப்பட்டு உடனடியாக இரசீது வழங்கப்படுகிறது.

பின்னர் 01.04.2016 முதல் UTIS (Urban Tree Information System) நடைமுறைப்படுத்தப்பட்டு கிட்டத்தட்ட 23 Modules-ல் 21 Modules படிப்படியாக கணினி மயமாக்கப்பட்டு வருகிறது.

மேலும் https://tnurbanepay.tn.gov.in என்ற இணையவழி வழியாக பொதுமக்கள் தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, வரியற்ற இனங்கள் மற்றும் தொழில் உரிமக் கட்டணம் போன்றவற்றை செலுத்தி ரசீது எடுத்துக்கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. மேலும் https://tnurbanepay.tn.gov.in வழியாக பொதுமக்கள் புதிய சொத்துவரி, புதிய தொழில்வரி, புதிய தொழில்உரிமக் கட்டணம் போன்றவற்றை விண்ணப்பிக்கலாம். அதன் மீது மேல் நடவடிக்கை தொடரப்பட்டு கணினி மூலம் ரசீது கொடுக்கப்படுகிறது.

காசாளருக்கென தனியாக ஒரு கணினி ஒதுக்கப்பட்டு உள்ளது. இதர வரவினங்களுக்கென பதிவுகள் கணினியில் பதிவு செய்யப்பட்டு உடனடியாக கணினியில் இருந்து ரசீது பிரிண்ட் செய்து கொடுக்கப்படுகிறது.

கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி சான்றிதழ்கள் ONLINE வழியாக பதிவு பெற்ற வரைவாளர்கள் மூலம் கணினியில் பதியப்பட்டு அலுவலகத்திற்கு கணினி வழியாகவோ அனுப்பப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வழங்கப்படுகிறது. சொத்துவரி, குடிநீர் கட்டணம் மற்றும் பெயர் மாற்ற உத்திரவு கணினியில் பதியப்பட்டு கணினி மூலம் வழங்கப்படுகின்றன.

புதிய கணக்கு முறைகள், Solid Waste Management வாகன விபரங்கள் நம் அலுவலகத்தின் அசையும் மற்றும் அசையா சொத்து இனங்கள், வரியற்ற இனங்கள் முதலியவை கணினியில் பதிவு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

நம் அலுவலகத்தில் உள்ள அலுவலகர்களின் சம்பளப் பட்டியல் சம்மந்தமான விபரங்கள் கணினி மூலம் கொடுக்கப்பட்டு சம்பள விபரங்கள், பிடித்தங்கள் சம்பந்தமானவற்றை கணினி மூலம் கொடுக்கப்பட்டு வருகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மூன்றாம்நிலை நகராட்சிகளுக்காக ஒரு இணையதளம் UTIS மூலம் உருவாக்கப்பட்டு உள்ளது. அதன் முகவரி https://tnurbantree.tn.gov.in/sivagangai இதில் சிவகங்கை நகராட்சியின் முழு விபரங்கள் அறிந்து கொள்ளலாம். மேலும் ஒவ்வொரு மாதம் நடக்கும் கூட்டம் மற்றும் கூட்டத் தீர்மானம் இணையதளத்தில் மாதவாரியாக பதியப்பட்டு வருகிறது. மக்களின் குறைகளை சம்மந்தப்பட்ட துறை அதிகாரியிடம் தெரிவிக்க அதிகாரியின் அலைபேசி மற்றும் துறை அதிகாரி விபரம் இணைய தளத்தில் பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

முடிவுரை:

அறிக்கையாண்டில் நடைபெற்ற சாதாரண அவசர மற்றும் சிறப்புக் கூட்டங்களில் சேர்க்கப்பட்ட அனைத்துப் பொருள்கள் மீது தீர்மானம் நிறைவேற்றப்பட்டன. நிறைவேற்றப்பட்ட அனைத்துப் பொருள்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு பொதுமக்களுக்கு தேவையான மிக அத்தியாவசியமான வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நகரில் அறிக்கையாண்டில் தொற்று நோய்கள் பரவா வண்ணம் மற்றும் இறப்பு ஏற்படா வண்ணம் இருக்க நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. அறிக்கை ஆண்டில் பிளேக், காலரா, மலேரியா காய்ச்சல், நுரையீரல் காய்ச்சல், மூளைக் காய்ச்சல், மஞ்சள் காமாலை, இசிவு, கக்குவான், தொண்டை அடைப்பான் போன்ற நோய்களால் இறப்பு ஏதும் ஏற்படவில்லை. நகரில் பொது சுகாதாரப் பணிகள் திருப்திகரமாக உள்ளது.

மேலும் இந்நகராட்சி பல்வேறு பணிகளின் பொறுப்பை ஏற்றுள்ள நகர்மன்றப் பொறியாளர்கள் மற்றும் அதன் பணியாளர்கள் மற்றும் நகர் அமைப்பு ஆய்வர்கள் ஆகியோர்களுக்கும் பொதுமக்கள் அத்தியாவசியத் தேவையான குடிநீர் இணைப்புகள் வழங்குதல், கட்டிட மனுக்கள் மீது அனுமதி வழங்குதல், வரிக்குறைப்பு மனுக்கள் மீது துரிதமான உத்திரவு மற்றும் அனைத்து பொதுமக்களின் அத்தியாவசிய பணிகளை உடனுடக்குடன் நிறைவேற்றுவது போன்ற பணிகளில் எவ்வித தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆணையாளர்(பொ)
சிவகங்கை நகராட்சி